376

19 JUL 1932

கலியுக நாதன் ஒப்பாரி.

* முதற்பாகம் *

இஃது

ஸ்ரீரங்கம் நரியந்தெரு

லெ. கிருஷ்ணமுத்துராஜாவால்

இயற்றப்பட்டு

'நடராஜா அச்சுக்கூடத்தில்' பதிப்பிக்கப்பட்டது

1932

2349
874 ε111

கலியுக நூதன ஒப்பாரி

பங்குனி மாதத்திலே நான் பிறந்த இலங்கை யிலே பங்குனித்தேரோட்டயிலே பச்சைக்கிளி வாய் திறந்து பட்டுமேல் ஆசைபட்டேன் எனக்கு பட்டிலே ஐநூறு பவுன் நகையும் முன்னூறு நான் பட்டை மடிச்சுடுத்தி பவுன் நகையும் மேல் பூட்டி என்னைக் கொண்ட பாண்டியரை முன்னனுப்பி நான் பிறந்த சீமை பழனிப்பயணமென்றால் இந்த பழனியிலுள்ள ஜனம் பட்டுக்குறைச்சலில்லை பவுன் நகைக்கு கம்மி என்றார் நான் பாழும் பிறப்போட இந்த பக்ஷமுள்ள தம்பியரோடு பதரிவிட்டேன் கண்ணீரு.

சித்திரை மாதத்திலே நான் பிறந்த இலங்கை யிலே சித்திரை தேரோட்டயிலே செல்லக்கிளி வாய் திறந்து நான் சேலைமேல் ஆசைபட்டேன் சேலையிலே ஐநூறு நான் பிறந்த சீமையிலே சிறு நகை முன்னூறு நான் சேலை மடிச்சுடித்தி சிறு நகையும் மேல் பூட்டி என்னைக்கொண்ட சீமானை முன்னனுப்பி நான் பிறந்த சீமை சிரங்கம் பயணமென்றால் இந்த சிரங்கத்தி லுள்ள ஜனம் சேலை குறைச்சலில்லை சிறு நகைக்கு கம்மி என்றார் சொல்ல பிறப்போட சீரோடும் தம்பியோட சிந்திவிட்டேன் கண்ணீரே.

தேங்காய் மாமேறி என்னை பெற்ற ஐயா உங்கள் கண்ணுள்ள நாளையிலே நீங்கள் தினுசுக்கொரு காய் இறக்கி தேங்காய் உடைத்துவைத்து தீபம் கொளுத்திவைத்து தென்னிலையில் தொன்னை தைத்து நீங்கள் பெற்ற சீதைக்கு ஆள் விட்டால் நீங்கள் பெற்ற சீதை வந்து நின்றழுக உங்கள் சீதைக்கு வாய்த்த சீமான் அவர் தேர் பூட்ட நீங்கள் போகும் தேரை அலங்கரித்து நம்ம தெருவெல்லாம் சிங்காரித்து நீங்கள் போகும் தெய்வலோகம் மோக்ஷந்தான்

மாங்காய் மரமேறி மனசுக்கொரு பிஞ்செறக்கி மாங்காய் உடைத்துவைத்து மகுடம் கொழுத்தி வைத்து மாவிலையில் தொண்ணை தைத்து நீங்கள் பெற்ற மகளுக்கு ஆள் விட்டால் நீங்கள் பெற்ற மகள் வந்து நின்றழுக உங்கள் மகளுக்கு வாய்த்த என்னை பெற்ற ஐயா என் மன்னவனுர் தேர் பூட்ட நீங்கள் போகுந்தேரை அலங்கரித்து நம்ம தெருவெல்லாம் சிங்காரித்து நீங்கள் போகும் தெய்வலோகம்மோக்ஷந் தான்.

எனக்கு புனுகு ஒரு கிண்ணியிலே பூவுமது கொண்டையிலே என்னுடைய புண்ணியரும் கிண்ணே

யிலே நான் புண்ணியர்க்கு வாச்சபாவி பெண்ணுலும் வனவாசம்.

சந்தனம் ஒரு கிண்ணியிலே எனக்கு தாழம்பூ கொண்டையிலே என்னுடைய சந்திரரும் திண்ணை யிலே நான் சந்திரருக்கு வாய்த்த பாவி தங்காள் வன வாசம்.

சோறும் வடித்திருக்க நான் பிறந்த வாசலிலே உங்களுக்கு சுடு தண்ணீர் போட்டிருக்க நீங்கள் சொகுசாய் குளிப்பீரென்று நான் பாவி சண்டாளி சோப்புகளும் வைத்திருக்க நீங்கள் சுழன்று ஓடும் தண்ணீரிலே துருமெயிலாய் போரேனென்று எனக்கு தெரிந்தவருக்கு சொல்லலியே.

என்னைபெற்ற உத்தமரும் தானிருந்தால் நான் பாவிக்கு உடுத்த துணியுண்டு உட்கார தாவுமுண்டு படுக்கவும் பாயுமுண்டு நான் பிறந்த வாசலிலே பஞ்சு மெத்தை தானுமுண்டு என்னைப்பெற்ற உத்தமர் இல் லாமல் உடுத்த துணியிழந்தேன் உட்கார தாவுமிழந் தேன் படுக்கவும் பாய் இழந்தேன் நான் பிறந்த வாச

யிலே பஞ்சமெத்தை தானுமிழந்தேன் நான் பத்தினி பெற்ற மகள் பதறி புலம்புறது நீங்கள் போகும் பரம லோகம் சம்மதமோ.

என்னுடைய புண்ணியரும் தானிருந்தால் எனக்கு பின்னல் சடையுமுண்டு பில்லாக்கு மூக்குத்தி நான் வாழும் வாசலிலே எனக்கு பெரிய நகை தானுமுண்டு என்னுடைய புண்ணியரும் இல்லாமல் நான் பின்னல் சடையிழந்தேன் பில்லாக்கு மூக்குத்தி பெரு நகையும் தானிழந்த பெருங்கவலை ரொம்பவுண்டு,

பாண்டியரும் தானிருந்தால் எனக்கு பாடி ரவிக்கையுண்டு பட்டு ரவிக்கையிலே பலதினுசுதானுமுண்டு இப்ப என்னுடைய பாண்டியரில்லாமல் என் பாடி ரவிக்கை இழந்தேன் பட்டு ரவிக்கையிலே பலதினுசும் நானிழந்தேன் பாங்கி வனவாசம் என்னைக்கொண்ட பாண்டியற்கு சம்மதமோ.

காசு பணமிருக்க கனத்ததொரு சீரிருக்க நான் காசுபணமிழந்தேன் கனத்ததோர் சீரிழந்தேன் என் கருணரையும் நானிழந்த எனக்கு கவலைகளும் ரொம்ப வுண்டு.

26577

அச்சடி பச்சைகுத்தி அறளிப்பூ தேர்கட்டி சியாழி மேளங்கொண்டு சிதம்பரத்துக் கோடியுண்டு என்னை பெற்ற ஐயா நீங்கள் பெற்ற பொண்ணு நீங் கள் பெற்ற சின்ன மகள் வாரேனென்றால் நீங்கள் போகுந்தேரைநிறுத்திடுங்கள் நீங்கள்பெற்றபெண்ணு சின்ன மகள் நான் தேர் முகத்தை பார்த்தழுக உங் கள் சின்ன மகள் கண்ணீரு உங்கள் தேர்மேல் சிதரி விழுந்துவிட்டால் நீங்கள் போகும் தெய்வலோகம் மோக்ஷந்தான்.

நாங்கள் தெற்கே திரும்பியல்லோ என்னை பெத்த ஐயா நாங்கள் திருக்கடல்போல் வைகை இருகரையும் நான் தாண்டி ஆனைக்கால் பேட்டை சொக்கரடிவாரம் தெண்டனிட்டோம் மருதை மீனுக்ஷியம்மன் தாங்கள் பாதம் பணிந்துவந்து நாலுங்கவிதி இந்த நாலு விதி சுத்தி வந்து இந்த பூக்கடையும் விதியிலே என் புண்ணியரும் நானும் தாயே ஒரு பிள்ளை வரம் கேட் கையிலே எங்களுக்கு பிள்ளைகளும்மில்லையென்று ஒரு பூனை குருக்கே விட்டார் இந்த சண்டாளபாவிக்கே ஒரு புள்ளிமான் எதிரே விட்டார் எங்களுக்கு பிள்ளை களும் தேவையில்லை ஒரு பூ மஞ்சள் சொந்தமில்லை என்னுடைய புண்ணியனுர் போகும் பாதை தாயே ஒரு பூப்பந்தல் கூடவேணும்,

225019
சென்னை

நான் வடக்கே திரும்பியல்லோ என்னை பெத்த ஐயா நான் வைகை யிருகரையும் தான் தாண்டி இந்த சிரங்கநாதர் சீர்பாதம் தெண்டனிட்டோம் திருவானைக்காவல் அகிலாண்டேஸ்வரி அடிபாதம் தெண்டனிட்டோம் அந்த தானு வளர்ந்த இந்த தாயுமான மலைமேலே நாங்களிருபேரும் தவமா தவமிருந்து இந்த பட்டணத்துவீதி நாங்கள் பலவீதிசுத்தி வந்து என் பாண்டியரும் நானும் தாயே நாங்கள் ஒரு பாலன் வரம் கேட்களியே எங்களுகு பாலகனுமில்லை ஒரு பாம்பை குருக்கே விட்டார் இந்த சண்டாளப் பாவிக்கே ஒரு பாலாரை முன்னேவிட்டார் எனக்கு பாலகனும் தேவையில்லை எனக்கு பல மஞ்சள் சொந்தமில்லை என்னுடைய பாண்டியனுர் போகும் பாதை தாயே அங்கு ஒரு பனி பந்தகூடவேணும்.

நான் குளிச்சு தலைமுழுகி என் குணமுள்ள ராசாவும் நானும் கும்பிட்டு கையெடுத்து ஒரு குழந்தை வரம் வேணுமென்ரும் எங்களுக்கு குழந்தைகளும் இல்லை என்று கோயிலுள்ள பூசாரி எங்களை கூப்பிட்டு சொன்னுரே.

முற்றிற்று.

☞ கூடிய சீக்கிரம் இரண்டாம் பாகம் வெளிவரும்.